**சொரணதொட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூலை 24 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து சொரணதொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின போது பூர்த்தி செய்யப்பட்ட 09 நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 3,955,526 தொகை நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள என மிகையாக காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கில் மீதி ரூபா 1,717,374 தொகையாக காணப்பட்ட போதிலும், உரிய அட்டவணையின் பிரகாரம் அது ரூபா 1,785,425 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 68,051 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 20,984,891 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதியில் நிலுவை வீதவரி ரூபா 95,638 தொகை, நிலுவை மூலதன உதவி ரூபா 16,632,455 தொகை மற்றும் நிலுவை ஏனைய வருமானங்கள் ரூபா 4,256,798 தொகை அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் செலவு கடன் கொடுத்தோர் மற்றும் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 25,512,070 தொகை மற்றும் பலவின வைப்புக்கள் ரூபா 1,717,374 தொகையும் அடங்கியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 687,850,618 தொகை 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு/ சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மற்றும் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க வர்த்தமானியின் கட்டளை இலக்கம் 67 | | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அனுமதிப்பத்திரங்களில் 37 சதவீதம் ஆகிய குறைந்த தொகைக்கே இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 202 | | கொள்வனவு செய்யும் மற்றும் வழங்கப்படும் அனைத்து பண்டங்களையும் உரிய முறையில் கணக்கெடுத்து இருப்பு பதிவேடு மற்றும் புத்தகங்களில் உட்படுத்தி நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 203, 204 | | 2016 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் 06 விதப்புரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் | | |
| அத்தியாயம் xxiv பிரிவு 1.6 | 57,630 | சபையில் சேவையாற்றி பின்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த 4 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடம் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதவியணி கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நி.பி. 571 | 23,753 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புச் செய்து இரண்டு வருடங்களை மிகைத்திருந்த 15 வைப்புக்களை ஆதனவழிப்பு செய்திருக்கவில்லை. |
| (உ) | 2006 ஜனவரி 25 ஆம் திகதிய தேசிய பெறுகை முகவராண்மையின் சுற்றறிக்கை இலக்கம் 8 இல் பந்தி 3.9.1 | 2,552,940 | ஒரே காலத்தில் இரண்டு மில்லியன்களை மிகைக்கும் ஒப்பந்த வேலைகள் சமூக அமைப்புக்களுக்கு வழங்கப்படக்கூடாது எனினும், அதற்கு முரணாக ஒரே சங்கத்திற்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | திறைசேரி செயலாளரின் பீஎப்/எப்எஸ்/நிதியம்/எம்ஏ/25/152 மற்றும் 2009 செம்டம்பர் 18 திகதிய சுற்றறிக்கை | | கப் வண்டி ஒன்றிற்காக 2017 செப்டம்பர் 06 திகதியின் பின்னர் காப்புறுதி உள்ளடக்கம் பெற்றிருக்கவில்லை. |
| (எ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 987,674 | சபைக்கு சொந்தமான 06 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 145,039 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,210 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் , சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காண்பிக்கப்படுகின்றன

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 5,096,724 | 1,995,311 | 1,682,654 | 312,657 | 5,096,740 | 1,779,372 | 1,521,842 | 257,530 |
| (ii) வாடகை | 509,800 | 395,364 | 358,600 | 36,764 | 1,526,000 | 373,963 | 344,145 | 29,818 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 800,000 | - | - | - | 686,000 | - | - | - |
| (iv) ஏனைய வருமானங்கள் | 4,317,457 | 4,396,624 | 1,208,725 | 3,187,821 | 1,880,500 | 1,602,871 | 3,662 | 1,601,766 |
| மொத்தம் | 10,723,981 | 6,787,299 | 3,249,979 | 3,537,242 | 9,189,240 | 12,945,446 | 1,869,449 | 1,889,114 |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

(அ) 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 6.8 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3.3 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும் வருட இறுதியில் ரூபா 3.5 மில்லியன் வருமானம் ஒன்றின் சேகரிப்பதற்கு வேண்டி இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 84 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 16 ஆம் திகதி 1998 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் முச்சக்கரவண்டி தரிப்பிடங்களுக்கு வருடாந்த அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 1,000 தொகை அறவிடப்பட வேண்டுமெனினும், பிரதேச சபையில் பதிவு செய்துள்ள 73 முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணம் அறவிடப்படாமையால் ரூபா 73,000 தொகை வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

### 2.2.3 வியாபார அனுமதிப்பத்திரம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152(1) இன் பிரகாரம் 1998 ஆம் இலக்க 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய வர்த்தமானியின் பிரகாரம் மார்ச் 31 திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 08 வர்த்தக நிலையங்கள் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,509,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 2,009,914 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டின் போது சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றிருக்காமை**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் செயற்படுத்தியிருந்த இரண்டு செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 996,958 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடைந்திருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

மீளாய்வாண்டின் போது இரண்டு செய்பணிகளை செயற்படுத்துவதற்கு பிரேரணைகள் அனுமதிக்கப்பட்டு ரூபா 20,400,000 இற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பணம் கிடைக்கப் பெறாமை மற்றும் நிர்மாணிக்கும் நிலைமையில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்கான கடன் தவணை மற்றும் வட்டி குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தாமையினால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 2,198,378 தொகை நிலுவையாக காணப்பட்டது.

**(உ) சுற்றாடல்சார் சிக்கல்கள்**

i. 2012 அக்தேபார் 05 ஆம் திகதிய 1178/45 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரதேச சபைகளின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்த துணை விதிகள் பிரதேச சபையினால் தழுவு இருந்த போதிலும், குப்பை வரி அறவீடு செய்வதற்கு தேவையான வளவுகளை இனங்காண்பதற்கு மற்றும் வரி அறவீடு செய்வதற்கு 2017 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ii. 1988 இன் 56 ஆம் இலக்கம், 2000 இன் 53 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டிய 06 வியாபாரப் பரப்புகளில் 14 வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 233,525 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஊவா உள்ளுராட்சி ஆணையாளரின் 2012 அக்தோபர் 16 திகதிய 2012/02 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் (ஆ) xiv இன் பிரகாரம் பிரதேச சபையின் ஆதனங்களை வாடகைக்கு கொடுக்கும் போது அதற்காக 06 மாத காலத்திற்கான பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுமெனினும், துங்ஹிந்த சந்தியில் வர்த்தக கட்டிடத்தொகுதியில் மேல் மாடிப் பகுதி மாதாந்தம் ரூபா 5,000 வாடகைக்கு 2017 மார்ச் 06 திகதி முதல் 2022 மார்ச் 06 வரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக 06 மாதங்களுக்கான வைப்புத் தொகை ரூபா 30,000 இனைப் பெற்றிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிப்பட்டுள்ள பதவியணியில் நான்கு வெற்றிடங்களும் மிகை ஊழியர்கள் இருபது பேரும் காணப்பட்டனர்.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சொரணகொட பிரதேச சபை கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஜுன் 14 திகதி உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 8,834,609 கடன் தொகைக்கு உரிய கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தியிருக்காமையால் கடன் தொகை 2015 செப்டம்பர் 28 மீள் கட்டமைக்கப்பட்டிருந்தமையால், புதிய கடன் பெறுமதி ரூபா 11,320,648 தொகை ஆக இருந்தது. இதன் காரணமாக சபைக்கு ரூபா 2,486,029 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைத்திட்டம்**

2017 ஆண்டிற்கான பெறுகைத்திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

2017 ஆண்டிற்கான பிரதேச சபை தொடர்பான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | குறைபாடு |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் மற்றும் பொருட்பதிவேட்டுப் பண்டங்களை இனங்கண்டு ஆவணப்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | இருப்பு கட்டுபாடு | (i) சபையின் பல்வேறு நிர்மாண வேலைகளுக்காக களஞ்சியத்தில் இருந்து பண்டங்கள் வழங்குதல் மற்றும் கொள்வனவு செய்வதற்காக பண்டங்கள் தேவைக் கோரிக்கை மற்றும் பெறுவனவு கட்டணம் உரிய விதமாக பதிவு செய்திருக்கவில்லை. |
| (இ) | வாகன மற்றும் இயந்திர உபகரணங்கள் | (i) சபையின் இயந்திரங்களை வெளி தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கும் போது முறையான அங்கீகாரம் மற்றும் கண்காணிப்பு காணப்படாமை.<br>(ii) இயந்திர உபகரணங்கள் நாளாந்த ஓட்ட பதிவு விபரங்கள் பேணப்படாமை.<br>(iii) வாகன கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் களின் கண்காணிப்பு பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |